# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, சான்று (திருத்தச்) சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, செத்தெம்பர் மாதம் 23 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 4.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2005 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, சான்று (திருத்தச்) சட்டம்

[2005 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஒ. 14/2005
4854

## சான்றுக் கட்டளைச் சட்டத்தைத் (14 ஆம் அத்தியாயம்) திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2005 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, சான்று (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

14 ஆம் அத்தியாயத்தின் 90அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**2.** 14 ஆம் அத்தியாயமான சான்றுக்கட்டளைச் சட்டத்தின் 90அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) "அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி" என்பதன் வரைவிலக்கணத்தில் "அத்தாட்சியுடன்கூடிய பிரதி எனப் பொருள்படும். " என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தாட்சியுடன்கூடிய பிரதியெனப் பொருள்படுமென்பதுடன், வங்கியாளர்களின் புத்தகங்கள் தகவல் முறைமையொன்றில் இலத்திரனியலால் காந்தத்தினால், ஒளியியலால் அல்லது வேறு வழிமுறைகளால் தேக்கம் செய்யப்பட்ட தரவைக் கொண்டிருக்குமிடத்து, அத்தகைய தரவின் அச்சுப்படியொன்றையும் அத்துடன் 1995 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சான்று (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 6 ஆம் பிரிவிற்கிணங்க செய்யப்பட்ட சத்தியக் கடதாசியொன்றையும் அல்லது ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது நியாயசபையின் முன்னிலையில் கணனிவழிச் சான்றைச் சமர்ப்பித்தல் தொடர்பில் அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் நியதிகளின்படி விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு அத்தாட்சிப்படுத்தும் ஆவணத்தையும் உள்ளடக்கும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம், அத்துடன்

(2) "வங்கியாளர்களின் புத்தகங்கள்" என்பதன் வரைவிலக்கணத்தில் "மற்றைய எல்லாப் புத்தகங்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மற்றைய எல்லாப் புத்தகங்

கள், அத்துடன் தகவல் முறைமையொன்றில் இலத்திரனியலால், காந்தத்தினால் ஒளியியலினால் அல்லது வேறு வழிமுறைகளினால் தேக்கம் செய்யப்பட்ட தரவு;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*